# 6 காய்கறித் தோட்டம்




0124CH06



© NCERT not to be republished


வயலிலிருந்து காய்கறிகளை எடுத்துச் செல்வதற்கு ரூமியும் ஷமியும் ஒருவருக்கு ஒருவர் உதவிக்கொண்டனர். இருவரும் காய்கறியைப் பறிப்பதற்குக் கூடையை எடுத்து வந்தனர். அவர்கள் இருவரும் சேர்ந்து எவ்வளவு காய்கறிகளைப் பறித்திருக்கின்றனர் என பார்போம்.



ரூமியின் பெட்டி    ரூமியின் பெட்டி    இருவருடையதும் சேர்த்து


அ. 7 தக்காளிகள் மற்றும் 5 தக்காளிகள் மொத்தமாகச் சேர்த்து 12 தக்காளிகள்

7 + 5 =______



ஆ. ஒரு கூடையில் 9 கேரட்டுகள் மற்றொரு கூடையில் 4 கேரட்டுகள்.

9 + 4 =__________



இ. ஒரு கூடையில் 8 முள்ளங்கிகள் மற்றொரு கூடையில் 8 முள்ளங்கிகள்

8 + 8 = _____




## திட்டப்பணி


எதாவது ஒரு காய்கறிக் கன்றை உங்கள் வீட்டு, பள்ளி, அருகில் உள்ள இடங்களில் நட்டுவையுங்கள். உங்களுடைய அனுபவங்களை உங்களுடைய குடும்பத்துடன் பகிருங்கள். கன்றை நன்றாகப் பராமரியுங்கள். நீங்கள் வளர்ந்துக் கொண்டிருக்கும் இளம் செடியை ஓவியமாக வரையலாம் அல்லது அதைப் புகைப்படும் எடுத்துக் கொண்டுவரலாம்.

© NCERT not to be republished

# மணி மற்றும் மாலை

## நாம் விளையாடுவோம்






© NCERT not to be republished

இந்த எண்களை நீங்கள் ஜின்லாடியில் எப்படி எண்ணுவீர்கள் என்பதைச் செய்துகாட்டுக.


13 + 4 =





14 + 5 =



6 + 8 =



5 + 7 =



துள்ளிக் குதித்து கூட்டுத் தொகையைகண்டுபிடித்தல்

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |

| | |
|---|---|
| 8 + 5 = 13 | 5 + 3 = 8 |
| 13 + 3 = ☐ | ☐ + ☐ = 13 |
| 2 + 16 = ☐ | ☐ + ☐ = 10 |
| 4 + 12 = ☐ | ☐ + ☐ = 18 |

உங்களுடைய சொந்த வழியில் கூட்டுக..

அ. சப்னா 12 வண்ண பென்சில்களை வைத்திருக்கிறாள்.  கௌரி 6 வண்ண பென்சில்களை வைத்திருக்கிறாள்.. அவர்கள் மொத்தம் எத்தனை பென்சில்கள் வைத்திருக்கின்றனர்??




சப்னா 12யும் 6யும் கூட்டினாள். அவளுக்கு 18 கிடைத்தது.

12 + 6 = 18

கூட்டுதல் முறை குறித்து விவாதியுங்கள். எப்படி குழந்தைகள் எண்ணினார்கள்? அதன்பின்பு எப்படி அதனுடன் 4 கூட்டினார்கள்? பயன்படுத்திய உத்திமுறையைப் பற்றி விவாதியுங்கள்.





© NCERT not to be republished

கௌரி அப்படியே செய்தாள்

$$\begin{array}{l} 12 \quad + 6 \\ 10 + 2 + 6 \\ 10 + \quad 8 = 18 \end{array}$$




உங்களால் இதை வேறுமாதிரி செய்யமுடியுமா? முயற்சி செய்யுங்கள். உங்களுடைய ஆசிரியருடன் விவாதியுங்கள்.

ஆ. அமன் 8 லட்டுகள் வைத்திருந்தான். சரண்ஜித் 6 லட்டுகள் வைத்திருந்தான். இருவரும் சேர்ந்து மொத்தம் எத்தனை லட்டுகள் வைத்திருந்தனர்?



இ. சேனா 12 வளையல்கள் வைத்திருந்தாள். மேலும் அதிகமாக 6 வளையல்கள் அவளுடைய சகோதரியிடமிருந்து அவளுக்குக் கிடைத்தன. இப்போது அவள் எத்தனை வளையல்கள் வைத்திருக்கிறாள்?




## நாம் செய்வோம்

சுற்றுலாவுக்கு நீ என்ன கொண்டுவர விருப்பப்படுகிறாய்? உங்களுடைய நண்பருடன் விவாதியுங்கள். நீங்கள் சுற்றுலாவுக்கு எடுத்துச் செல்ல விரும்பும் பொருட்களை வரைக. நீங்கள் ஒதுக்கிய இடத்தில் இருக்கும் சாப்பிடக்கூடிய பொருட்களின் மொத்த எண்ணிக்கையை எழுதுக.





© NCERT not to be republished

## கழித்தல்

சில எண்களுடன் கழித்தல்




15 – 9 = 6

| | | | |
|---|---|---|---|
| A. |  16 – 4 = ☐ | B. |  12 – 5 = ☐ |
| C. |  14 – 7 = ☐ | D. |  16 – 6 = ☐ |
| E. |  15 – 5 = ☐ | F. | 15 – 0 = ☐ |
| G. | 17 – 9 = ☐ | H. | 13 – 3 = ☐ |

© NCERT not to be republished

## துள்ளுதல் மற்றும் குதித்தல்

அஞ்சலியும் ரேணுவும் துள்ளிக் குதித்து விளையாடுகிறார்கள்.






### நாம் செய்வோம்

விளையாட்டு மைதானத்திலோ அல்லது வீட்டிலோ ஒரு எண் பட்டையை உருவாக்கி நீங்கள் ஒரே இடத்தை அடைவதற்கான பல்வேறு வழிகளை கண்டுபிடிக்கவும்.

| | | |
|---|---|---|
| 8 + 7 | 12 | 15 – 3 |
| 9 + 9 | 15 | 18 – 1 |
| 10 + 2 | 14 | 17 – 2 |
| 16 + 1 | 17 | 18 – 0 |
| 11 + 3 | 18 | 16 – 2 |

இதே போன்ற கேள்விகளை உருவாக்கி குழந்தைகள் அவர்களுடைய உத்தியைப் பயன்படுத்தி பதில் கண்டுபிடிக்கவிடுங்கள்.



# சிக்கல் கதைகள்

உங்களுடைய பதிலைப் பெட்டியில் எழுதுக.

அ. ஒரு குயவர் 9 விளக்குகளை வைத்திருக்கிறார். அதில் 5 விளக்குகளை விற்றுவிட்டார். அடுத்து அவர் 7 விளக்குகளைச் செய்தார். இப்போது அவரிடம் எத்தனை விளக்குகள் இருக்கும்?



ஆ. முதல் நிறுத்தத்தில் பேருந்தில் 6 குழந்தைகள் இருந்தனர். இரண்டாவது நிறுத்தத்தில் 8 குழந்தைகள் பேருந்தில் ஏறினர். மூன்றாவது நிறுத்தத்தில் 7 குழந்தைகள் இறங்கினர். இப்போது மூன்றாவது நிறுத்தத்தில் பேருந்தில் எத்தனை குழந்தைகள் உள்ளனர்?




இ. பேருந்தில் 18 இருக்கைகள் உள்ளன. அதில் 9 இருக்கைகளில் ஏற்கனவே குழந்தைகள் அமர்ந்துள்ளனர். மேலும் எத்தனை குழந்தைகள் அந்தப் பேருந்தின் உள்ளே அமரலாம்?

ஈ. குல்ஜித்க்கு அவளுடைய பெட்டியில் 14 இனிப்புகள் கிடைத்தன. அவற்றில் சில இனிப்புகளை நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டாள். அவளிடம் மீதம் 6 இனிப்புகள் உள்ளன. அவள் எத்தனை இனிப்புகளைகளை நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டாள்?

உ. ராமனுக்கு 12 வாழைப்பழங்கள் கிடைத்தன. அவற்றில் சிலவற்றை அவன் சாப்பிட்டுவிட்டான். அவனிடம் 5 வாழைப்பழங்கள் மீதம் உள்ளன. அவன் எத்தனை வாழைப்பழங்களைச் சாப்பிட்டான்?

© NCERT not to be republished